OS 40/2019

வா.சா.1 கேசவன் த/பெ குமார்

நாள் 17.03.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. என் அப்பா குமார் ஆரணியில் உள்ளார். என் தாத்தா கண்ணன் இறப்பதற்கு முன்பு குடும்ப ஏற்பாடு ஒன்று செய்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. சேலம் சுந்தரம் மற்றும் முள்ளிப்பட்டு தாமோதரன் ஆகியோர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சேலம் சுந்தரம் மற்றும் முள்ளிப்பட்டு தாமோதரன் ஆகியோர் முன்னிலையில் தான் என் தாத்தா கண்ணன் குடும்ப ஏற்பாடு செய்தார் என்றும் அதுபற்றி எனக்கு தெரியும் என்றும் ஆனால் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. என் தாத்தா கண்ணன் இறக்கும் போது எனக்கு 15 வயது இருக்கும். அப்போது என் அப்பா குமார் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு என் தாத்தா ஏற்படுத்திய குடும்ப ஏற்பாடு பற்றி தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது என் அப்பாவை தான் கேட்க வேண்டும். குடும்ப ஏற்பாடு பற்றி எனக்கும் தெரியும் என் அப்பாவிற்கும் தெரியும் என்றும் அதனால் தான் என் அப்பா சாட்சியம் அளிக்க வராமல் என்னை அனுப்பி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

6. என் அப்பாவிற்கு 6 மாதங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டிருந்தது. தற்போது தான் என் அப்பா நடக்க ஆரம்பித்துள்ளார். என் அம்மா கௌரி அம்மாள் இறந்த பிறகு என் அப்பா வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு அவர் மூலம் குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா என்னுடன் சகஜமாக தான் உள்ளார். சாட்சியம் அளிக்க அழைத்தால் வருவார்.

7. ரத்தினம்மாள் என்பவர் என் தாத்தா கண்ணனின் முதல் மனைவி என்றால் சரிதான். ரத்தினம்மாள் 1967ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு என் தாத்தா கண்ணன் 1ம் பிரதிவாதி மல்லிகாவை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)